Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 03 | (19 - 09 - 1992) | சனிக்கிழமை | ஓசை 214

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு மேலதிகபடி வழங்கபணிப்பு

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மேலதிகப் படியான நூறுரூபா நாடெங்கிலும் ஆசிரியர் சேவையிலுள்ள சுமார் 35, 000 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் ஜனவரி 1992இல் இருந்து நிலுவையுடன் வழங்கப்படவுள்ளது இது தொடர்பான பணிப்புரையை உயர் கல்வி அமைச்சின் பிரதான கணக்காளர் பனிகவர்த்தனா நிதிச் சுற்றறிக்கை 06/92ன்படி அனைத்துப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கியுள்ளார். மேற்படி சுற்றறிக்கை தொடர்பான அறிவுறுத்தல்கள் யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளரினால் சகலகோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர்களுக்கு நேற்று முன் தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது ஜனவரி 1992இல் இருந்து இம் மாதம் வரை இப்படியை நிலு (4ஆம் பக்கம் பார்க்க)

### மாதகல், இளவாலை, அளவெட்டியிலிருந்து

# முன்னேறிய இராணுவம் விரட்டியடிப்பு

# பண்டத்தரிப்பில் உக்கிரமான சண்டை

## தாக்குதல்களுக்கு மத்தியிலும் திலீபனுக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாக வேள்வியில் ஆகுதி ஆகிய தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை யொட்டி நான்காவது நாளாக நேற்றும் பெருந்திரளான மக்கள் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று அதிகாலை முதல் குடாநாட்டின் ஒரு பகுதி மீது சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து பெரியளவிலான தாக்குதல்களை நடாத்திய போதிலும் தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நிகழ்ந்தன. மக்களும் பெரும் திரளாக திரண்டு சென்று திலீபனின் நினைவுப் பந்தல்களில் வைக்கப்பட்டிருந்த திலீபனின் திருவுருவப் படங்களுக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தியாகி திலீபனின் ஞாபகார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சிமுறையிலான உண்ணாவிரத நிகழ்ச்சிகளும் சிரமதான நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. சுழிபுரம் பகுதி மீது பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

எனினும் வளக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் பெருமளவு மக்கள் திரண்டு அடையாள உண்ணாவிரதமிருந்தனர் இதேபோல ஏனைய பகுதிகளிலும் வழமைபோல அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (க)

## தியாகி திலீபன் நினைவு இன்றையசிரமதானபணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இன்று இடம் பெறவுள்ள சிரமதானப் பணிகளின் விபரம் வருமாறு:

மணியரசன் குடியிருப்பில் வசிக்கும் மக்களால் மணியரசன் குடியிருப்பில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் வட்டப் பிரிவில் பின்தங்கிய கிராமமாகிய முள்ளி கிராமத்தில் 200 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி மற்றும் சுகாதார வசதிகள் சிரமதானமூலம் ஏற்படுத்தப்படவுள்ளது.

கோப்பாய் வட்டப் பிரிவில் வெள்ளவாய்க்கால் வீதியும், மெடிக்தாஸ் அண்ணா வீதியும் (4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு அதரவாக தீர்மானம்

## படைகளுக்கு பலத்த இழப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை பண்டத்தரிப்பு நோக்கி சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டபாரிய இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது இதன் காரணமாக பண்டத்தரிப்பைக் கைப்பற்றிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் தமது முயற்சியைக் கைவிட்டு இராணுவம் பலத்த இழப்புடன் தனது பழைய நிலைகளுக்குத் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை 5 30 மணியளவில் மாதகல், இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் தரித்திருந்த இராணுவத்தினர் பண்டத்தரிப்பு, விளான் சந்திகளைக் கைப்பற்றும் நோக்கில் பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்ட இத்தாக்குதலில் நவீன டாங்கிகளும், கவச வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவியும் பெறப்பட்டன. மேலும் முகாம்களில் இருந்து பலத்த எறிகணை வீச்சும் இடம் பெற்றது.

ஆனால்புலிகளின்உக்கிரதாக்குதல்களினால் இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டதோடு, முன்னேறிய பகுதியில் இருந்து நேற்று மாலை விரட்டியடிக்கப்பட்டனர். அதிகாலை 5. 30 மணியளவில் முன்னேற முயன்ற இராணுவத்தினரைகாலை 6. 00 மணியளவில் எதிர்கொண்ட புலிகள் உக்கிர தாக்குதலைத் தொடுத்தனர் இத்தாக்குதல் மாலை 5 00 மணிவரையும் நடைபெற்றதுஆனால்மோதல் தொடர்ச்சியானதாக இல்லாமல், இடைவிட்டு ஆனால் பாரிய அளவினதான உக்கிரச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிசிலின் வழிகாட்டலில் நடைபெற்ற தாக்குதலாம்

(கொழும்பு)

பண்டத்தரிப்பு பகுதியில் நேற்றுக் காலை ''சண்டமாருதம்'' என்னும் யுத்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதென கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினவின் வழிகாட்டலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் நேற்று நண்பகலுடன் இந் நடவடிக்கை பூர்த்தி அடைந்ததாகவும்,

இந் நடவடிக்கையின்போது மூன்று படைப்பிரிவுகள் ஈடுபடுத்தப்பட்டன என்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்பு இணைப்பு

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை யொட்டி யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு இணைப்புஉள்ளே

## மக்கள் குடிமனைகள் மீது

நாளாக நேற்றும் பெருந்திரவான மக்கள் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று அதிகாலை முதல் குடாநாட்டின் ஒரு பகுதி மீது சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து பெரியளவிலான தாக்குதல்களை நடாத்திய போதிலும் தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நிகழ்ந்தன. மக்களும் பெரும் திரளாக திரண்டு சென்று திலீபனின் நினைவுப் பந்தல்களில் வைக்கப்பட்டிருந்த திலீபனின் திருவுருவப் படங்களுக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி

களும் சிறப்பாக நடைபெற்றன. சுழிபுரம் பகுதி மீது பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்

ஏனைய பகுதிகளிலும் வழமை போல அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (க)

## தியாகி திலீபன் நினைவு இன்றைய சிரமதானபணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இன்று இடம்பெறவுள்ள சிரமதானப் பணிகளின் விபரம் வருமாறு:

மணியரசன் குடியிருப்பில் வசிக்கும் மக்களால் மணியரசன் குடியிருப்பில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் வட்டப் பிரிவில் பின்தங்கிய கிராமமாகிய முள்ளி கிராமத்தில் 200 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி மற்றும் சுகாதார வசதிகள் சிரமதானமூலம் ஏற்படுத்தப்படவுள்ளது.

கோப்பாய் வட்டப் பிரிவில் வெள்ளவாய்க்கால் வீதியும், மெடிக்தாஸ் அண்ணா வீதியும்

(4 ஆம் பக்கம் பார்க்க

மணியளவில் மாதகல், இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் தரித்திருந்த இராணுவத்தினர் பண்டத்தரிப்பு, விளான் சந்திகளைக் கைப்

தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்ட இத்தாக்குதலில் நவீன டாங்கிகளும், கவச வாகனங்

## சிசிலின் வழிகாட்டலில் நடைபெற்ற தாக்குதலாம்

(கொழும்பு)

பண்டத்தரிப்பு பகுதியில் நேற்றுக் காலை ''சண்டமாருதம்'' என்னும் யுத்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதென கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்திய ரத்தினவின் வழிகாட்டலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் நேற்று நண்பகலுடன் இந் நடவடிக்கை பூர்த்தி அடைந்ததாகவும்,

இந் நடவடிக்கையின்போது மூன்று படைப்பிரிவுகள் ஈடுபடுத்தப்பட்டன என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

களும் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவியும் பெறப்பட்டன. மேலும் முகாம்களில் இருந்து பலத்த எறிகணை வீச்சும் இடம்பெற்றது.

ஆனால்புலிகளின்உக்கிரதாக்குதல்களினால் இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டதோடு, முன்னேறிய பகுதியில் இருந்து நேற்று மாலை விரட்டியடிக்கப்பட்டனர். அதிகாலை 5.30 மணியளவில் முன்னேற முயன்ற இராணுவத்தினரைகாலை 6.00 மணியளவில் எதிர்கொண்ட புலிகள் உக்கிர தாக்குதலைத்

தொடுத்தனர் இத்தாக்குதல் மாலை 5.00 மணிவரையும் நடைபெற்றதுஆனால்மோதல் தொடர்ச்சியானதாக இல்லாமல், இடைவிட்டு ஆனால் பாரிய அளவினதான உக்கிரச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறப்பு இணைப்பு

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை யொட்டி யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு இணைப்புஉள்ளே

புலிகளுக்கு ஆதரவாக தீர்மானம்

# ராம்தாஸ், நெடுமாறன் உட்பட ஏழு தலைவர்கள் கைது

(சென்னை)

சென்னையில் அண்மையில் நடைபெற்ற தமிழர்கள் வாழ்வுரிமை மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தீர்மானம் எடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டின் பேரில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ், முன்னாள் அமைச்சர் பண்டுருட்டி ராமச்சந்திரன் தமிழ்தேசிய கட்சித் தலைவர் ப. நெடுமாறன் உட்பட ஏழு அரசியல் தலைவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை திண்டிவனத்தில் டாக்டர் ராம்தாஸும்சென்னையில்பண்டுருட்டி ராமச்சந்திரனும் கைது செய்யப்பட்டனர் இவர்களைத் தவிர விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புக்களைச் சேர்ந்த தியாகு,வி.பி. சுப்பிரமணியம், மணியரசன் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்களை பொலிசார் சென்னை மஜிஸ்ரேட் கோர்டிற்கு கொண்டு சென்றபோது அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இவர்களை காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டார்.

இவர்களை சட்ட விரோத தடுப்பு நடவடிக்கையின் கீழ் தாங்கள் கைது செய்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

சென்னையில் அண்மையில் நடந்து முடிந்த தமிழர்கள் வாழ்வுரிமை மா நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டதும் மா நாட்டை ஒட்டி நடைபெற்ற ஊர்வலத்தில் தலைவர் பிரபாகரனின் உருவப் படங்கள் தாங்கிச் செல்லப்பட்டதும் தெரிந்ததே

டாக்டர் எஸ் ராம்தாஸ், பண்டுருட்டி ராமச்சந்திரன் உட்பட நால்வர் நேற்று மாலை மூன்று மணியளவில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் ப.நெடுமாறன் உட்பட ஏனைய மூவரும் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## தலைவர்கள் கைதின் எதிரொலி தமிழகத்தில் கொந்தளிப்பு

### 1800 பேர் கைது

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ், பண்டுருட்டி ராமச்சந்திரன், ப. நெடுமாறன் உட்பட ஏழு அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பாகங்களில் கொத்தளிப்பு நிலை உருவாகியுள்ளது.

இவர்களை கைது செய்ததை ஆட்சேபித்து மக்கள் வீதிகளில் மறியல் செய்தனர் இவ்வாறு மறியல் செய்தவர்களில் 1800 பேரை அண்ணா சாலையில் பொலிசார் கைது செய்தனர்.

திருத்தணிகையில் பேருந்துகள் கொளுத்தப்பட்டன. தென்னாற்காடு,செங்கை, எம். ஜி ஆர். திருச்சி ஆகிய மாவட்டங்களில் கொந்தளிப்பு நிலை காணப்படுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வீரச்சாவு



2-ம்லெப்.தேவானந்தி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு நோக்கி நேற்று முன்னேறிய சிறிலங்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் குடிமனைகள் மீது அகோர எறிகணைத் தாக்கு

### இருவர் பலி; 15 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பகுதிகளை நோக்கி சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து மும்முனைத்தாக்குதல் களை நடாத்தியுள்ளன. இத்தாக்குதல்களினால் இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் பதினைந்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5-00 மணியளவில் ஆரம்பமாகிய இத்தாக்குதல் நண்பகலுக்கு பின்னரும் நீடித்தது. அளவெட்டி, மாதகல், இளவாலை, காரைநகர் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரும், மாதகல், திருவடிநிலை, காரைநகர் ஆகிய கடற்பிராந்தியத்தில் தரித்து நின்ற கடற்படையினரும், வானத்தில் வட்டமிட்ட உலங்கு வானூர்திகளும் இணைந்து சுழிபுரம், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு மூளாய், பொன்னாலை, சங்கானை, மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய், சித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வலி - மேற்கு மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதி மீது சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து நடாத்திய தாக்குதல்களினால்சுமார் இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளன.ர் பண்டத்தரிப்பு, சுழிபுரம், சித்தன்கேணி, வடலியடைப்பு,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கரையோர பகுதியில் அதிகாலை 'ஷெல்' வீச்சு

### குருநகரில் 8 பேர் காயம்

### குருமனை மீதும் தாக்குதல்

மண்டைதீவுப்பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை யாழ்நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி ஆட்டிலறி ஷெல், பீரங்கி, மற்றும் 50 கலிபர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதில் 8 பொதுமக்கள் காயமடைந்தனர் புனிதயாகப்பர் கோயில் பாதிரியார் மடம் சேதமடைந்ததுடன் பத்திற்கும் மேற்பட்ட வீடுகளும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை ஆறுமணி தொடக்கம் 6.30 மணிவரை தொடர்ச்சியாக மேற்படி பகு

(4 ஆம் பக்கம் பார்க்க)


## தியாகச்சுடர் திலீபனின் நினைவில் நனைவோம்

(5072)

வெடிக்கட்டும் மக்கள் புரட்சி விடியட்டும் தமிழீழமாக -பிரதேச வர்த்தகர் சங்கம், நல்லூர்.

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிசஞும் எம்மிடம் உண்டு எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி/5070)

### இலுப்பை விதை

இலுப்பை விதை வாங்கப்படுகிறது அண்ணாகோப்பி கடைகளிலும் ஏற்கப்படுகிறது மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/5049)

### அனுமதி மாதிரிப் பரீட்சை [ஆண்டு 6]

ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 20-09-1992 ஞாயிறு நாளை மு. ப. 8 00, மு. ப. 11. 00 மணி நேரங்களில் நடைபெறும் வெளி மாணவரும் தோற்றலாம் புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3197)

## தானியங்கள் திருட்டு

நவாலியில் இரவு வேளைகளில் சிறுபோகத் தானியங்கள் திருடப்பட்டு வருவதாக விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது.

கச்சான், குரக்கன் என்பனவே இரவு வேளைகளில் கூட்டமாக வருவோரால் திருடிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [05]

### கடிதத் திருட்டு; மூவர் கைது

வெளிநாட்டுக் கடிதங்களை திருடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று தபால் திணைக்கள ஊழியர்கள் வாதுவைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### ஐந்து பொலிசார் படுகாயம்

செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா பொலிஸ் ஜீப்பொன்று கடந்த புதன்கிழமை தடம் புரண்டதில் ஐந்து பொலிசார் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். அகதிமுகாமில் சுகாதார மையம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள அகதிமுகாம்களில் சத்துணவு இல்லாமையினால் கவலைக்கிடமான நிலையை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் உடனடி உதவிகளை வழங்கிட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது:

இந்தவகையில் சத்துணவு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கவும் அவர்களது ஆரோக்கியத்தைப் பேணவும் தமிழர் புனர்வாழ்வு கழகம் யாழ். குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களில் சுகாதாரமையங்களை அமைத்து வருகிறது:

யாழ்ப்பாண குடாநாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஏனைய சமூக அமைப்புக்களும் அமைத்துக் கொடுத்த குடிசைத்திட்டங்களில் இந்த நலன்காப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டுவருகின்றன:

தென்மராட்சியில் கெற்பலியில் 646 குடிசைகளில் குடியமர்த்தப் பட்டுள்ள 3,256 தீவக அகதிகளில் 16 குழந்தைகள் சத்துணவு இன்மையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன தமிழர் புனர்வாழ்வு கழகம் எடுத்த தீவிர துரித முயற்சியினால் இக் குழந்தைகள் காப்பாற்றப்பட்டன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அகதிமுகாம்களில் 1,845 குழந்தைகள் மேற்படி கழகம் அமைந்துள்ள சுகாதார மையங்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன:

இது தவிர வன்னிப்பகுதியில் 1,312 குழந்தைகளையும் 125 கர்ப்பிணித்தாய்மார்களையும் பராமரிக்கும் செயற்பாடுகளில் இக்கழகத்தின் சுகாதார மையங்கள் ஈடுபட்டு வருகின்றன.

### போட்டிகள் ஒத்திவைப்பு

23-09-92 இல் நடைபெற இருந்த கல்லூரிகளுக்கான விஞ்ஞான - வினா விடைப் போட்டி, விஞ்ஞான - பேச்சுப் போட்டி ஆகியன 12-01-93 இற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## மண்முனை அகதிமுகாமில் அம்மை பரவும் அபாயம்

(மண்டூர்)

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் அம்மை நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது சுகாதாரச் சீர்கேடே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்வியங்காடு அகதி முகாமில் 8 பேருககும் வீச்சுக்கல்முனை அகதிமுகாமில் 2 பேருக்கும் சகிரா கல்லூரி அகதி முகாமில் 20 பேருக்கும் அம்மை நோய் பீடித்துள்ளதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

சுதந்திரக் கட்சிக்குள்

## சர்ச்சைக்கு முடிவுகட்ட அங்கத்தவர் வற்புறுத்து

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான சர்ச்சைக்கு தீர்வு ஏற்படாவிட்டால் அத்தனகலவில் உள்ள சுதந்திரக் கட்சியின் கிளைகள் அனைத்தையும் கலைத்து விடப்போவதாக குறிப்பிடும் முறையீடு ஒன்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் தயாரித்து கையெழுத்திட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குடும்பப் பூசல் தொடர்ந்தும் நிலவுமானால் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றி பெற முடியாது எனவும் அந்த முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரிகா குமாரணதுங்காவிற்கும் அநுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையில் நடைபெறும் தலைமைத்துவப் போட்டி அவர்களைச் சுற்றியுள்ள ஆதரவாளர்களின் தூண்டுதல்களினால் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும் அந்த முறையீட்டில் கூறப்பட்டுள்ளது:


## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1992 / 93

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B. A.
- விஞ்ஞானமாணி B. Sc (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி B. com

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் விபரத்திரட்டையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10 00 செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் 11 – 10 – 1992 இல் ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:

பட்டப்படிப்புகள் கல்லூரி
148 1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

- வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமான நிறுவனம் யாழ்நகரில் இதுவே.

(சி/5071)


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
02 - 01 - 1944

அழிப்பு
14 - 10 - 1987



உயர்திரு
**சின்னப்பு - சண்முகசுந்தரம்**
திதி: 19 - 09 - 1992

அன்புமிகு அப்பாவே!
அன்புடன் வளர்த்தீர்களே,
நாங்கள்படும் வேதனைகளும், கஷ்டங்களும்,
நீங்களில்லா இவ்வாழ்வு - ஏன்
எங்களுக்கென்று
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்
எங்களுடன் மீண்டும் வரமாட்டீர்களோ
என்றும் எங்கள் இதயத்தில் நிறைந்திருப்பீர்கள்

49, வில்வந்தெரு வீதி,
கொழும்புத்துறை.

மனைவி, பிள்ளைகள்.

(சி/5069)

## அறிவித்தல்

வட பிராந்திய
சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
யாழ். கிளை 1

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் 23 - 9 - 92 புதன் காலை 7 00 மணியளவில் நடைபெறவுள்ள தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவு கூரல் உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொள்வதற்கு யாழ். கிளை 1 இற்கு உட்பட்ட சகல அங்கத்தவர்களையும் தவறாது காரியாலயத்துக்கு சமுகம் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சங்க நிர்வாகம்

இல. 1083, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (3198)

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 19

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை மூதூர், எலவ் - 03 பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். துரைச்சாமி** [பொடியப்பு விநாயகமூர்த்தி - பெருவெளி, மூதூர், திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு அம்பாறை - அட்டாளைச்சேனை பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். தேவா** [சாமித்தம்பி கிருஸ்ணமூர்த்தி - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை]

யாழ்ப்பாணம் - நீர்வேலிப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சிறி** [சற்குணராசா பாஸ்கர் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்]

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளிலும் சிறிலங்காப் படையினராலும் முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் சுட்டும், வெட்டியும படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 35 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -


**கப்டன் இம்ரான்** [தில்லையம்பலம்பிள்ளை ஜெகதீசன் - துறை நீலாவணை, மட்டக்களப்பு]

**கப்டன் சீலன்** [தாமோதரம்பிள்ளை இளம்பிறை

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 3-ம் ஆண்டு நினைவலைகள்



செய்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது. [05]

### கடிதத் திருட்டு; மூவர் கைது

வெளிநாட்டுக் கடிதங்களை திருடும் நடவடிக்கையில் ஈடு பட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று தபால் திணைக்கள ஊழியர்கள் வாதுவைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### ஐந்து பொலிசார் படுகாயம்

செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா பொலிஸ் ஜீப்பொன்று கடந்த புதன்கிழமை தடம் புரண்டதில் ஐந்து பொலிசார் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த ஐவரும் மதவாச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும், ஆபத்தான நிலையில் இருந்த நால்வர் மன்னர் அநுராதபுரத்துக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**நாட்டியக் கலைமணிச் சான்றிதழை இரத்துச்செய்தல்**

செல்வி பிரியதர்சினி அமிர்தலிங்கம்

மேற்கூறியவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1989 டிசம்பரில் வழங்கிய நாட்டியக்கலைமணிச் சான்றிதழ், உடனடியாக இரத்துச் செய்யப்படுகிறதென்பதை அரசு நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

இச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் இவருக்கு ஏதும் நியமனம் வழங்கப்பட்டால், அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறுப்பாகமாட்டாது.

- பதிவாளர்

(சி/5074)

---

ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு :

பட்டப்படிப்புகள் கல்லூரி
148 1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

❋ வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமான நிறுவனம் யாழ்நகரில் இதுவே.

(சி/5071)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



19-09-1991 அன்று மணலாறு மாவட்டத்தில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த

**வீரவேங்கை பிருந்தன்**
**[சுந்தரலிங்கம் - இந்திரலிங்கம் (சூரி)]**

| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 07-11-1973 | 19-09-1991 |

எத்தனை பிணம் விழுந்தாலும்
எங்கள் மண்ணதை விட்டிடோம்-
என்று கொட்டியது உந்தன் பேரிகை
எட்டுத் திசை எங்கும் கொட்டி முழங்குது
நீ சிந்திய ரத்தத் துளிதனில்
ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் எழுந்து விட்டார்.
அவர் வழியினிலே நாம் அனைவரும் எழுந்துவிட்டோம்.

மற்றும் அந்நாளில் வீரச்சாவை அணைத்துக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சுப்பர்மட மக்கள்

வியாபாரிமூலைச்சந்தி
பருத்தித்துறை

(3188)

---

அன்புமிகு அப்பாவே!
அன்புடன் வளர்த்தீர்களே,
நாங்கள்படும் வேதனைகளும், கஷ்டங்களும்,
நீங்களில்லா இவ்வாழ்வு - ஏன்
எங்களுக்கென்று
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்
எங்களுடன் மீண்டும் வரமாட்டீர்களோ
என்றும் எங்கள் இதயத்தில் நிறைந்திருப்பீர்கள்


49, வில்வந்தெரு வீதி, கொழும்புத்துறை.

மனைவி, பிள்ளைகள்.

(சி/5069)

---

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



**உயர்திரு**
**நமசிவாயம் தெய்வேந்திரன்**
**(நாதன்)**

| ஆனந்த மழையில் : | ஆறாத்துயரில்: |
|---|---|
| 15 - 09 - 1958 | 22 - 09 - 1989 |

அன்னைக்கு ஒரு மகனாய் அவதரித்தாய் - நாதா
அந்நியரின் கொடூரத்தால் மாண்டுவிட்டாய்
ஆண்டுகள் மூன்றுதான் சென்றிடினும்
ஆறுமோ எம்துயரம் அன்பு மகனே!

எந்நாளும் உன்நினைவே எமது நெஞ்சில்
எரிமலையாய் குமுறுகிறோம் உனையிழந்து
ஆயிரம் தான் வந்திடினும் ஐயா உன்றன்
அன்புமுகம் மறந்து நாமும் வாழலாமோ!

இனியவனே எம் அன்புச் செல்வமகனே
வாடுகிறோம் எந்நாளும் உன் நினைவால்
இறையவனின் பாதம தனிலுறைந்து
இன்பமுடன்நீ அமைதிபெற

வேண்டி நிற்கும்

அம்மா, ஆசையம்மா, தங்கைமார்,
தம்பிமார், மைத்துனர், மருமகள்.

வேலணை கிழக்கு,

(3191)

---

லெப். துரைச்சாமி [பொடியப்பு விநாயகமூர்த்தி- பெருவெளி, மூதூர், திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு அம்பாறை - அட்டாளைச்சேனை பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். தேவா [சாமித்தம்பி கிருஸ்ணமூர்த்தி -பாண்டிருப்பு, கல்முனை-அம்பாறை]

யாழ்ப்பாணம் - நீர்வேலிப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

சிறி [சற்குணராசா பாஸ்கர் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்]

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளிலும் சிறிலங்காப் படையினராலும் முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் சுட்டும், வெட்டியும படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 35 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் இப்ரான் [தில்லையம்பலம்பிள்ளை ஜெகதீசன் - துறை நீலாவணை, மட்டக்களப்பு]

கப்டன் சீலன் [தாமோதரம்பிள்ளை இளம்பிறைநாதன் - சங்கத்தானை சாவகச்சேரி, யாழ்ப்பாணம்]

லெப். தப்பி / கண்ணன் [பாலசுப்பிரமணியம் தேவராசா - கல்வியங்காடு, யாழ்ப்பாணம்]

பிருந்தன் [சுந்தரலிங்கம் இந்திரலிங்கம் - அல்வாய் வடக்கு, வியாபாரிமூலை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம]

மல்லிகா [செல்வலட்சுமி இராசலிங்கம - 5-ம் வாய்க்கால், கிளிநொச்சி]

கார்த்திகா [வசந்தா நடராசா - செட்டிப்புலம், வேலணை கிழக்கு, யாழ்ப்பாணம்]

சுமன் [இராசையா சந்திரகுமார் - நொச்சிகுளம், ஓமந்தை, வவுனியா]

தும்பன் [மகாதேவா குமணன் - மடத்தடி, சாவகச்சேரி வடக்கு, யாழ்ப்பாணம்]

றோசான் [ஆறுமுகம் சந்திரன் - பள்ளிமுனை, மன்னார்]

ஜீவா [சுப்பிரமணியம் கமலநாதன் - 6-ம் வட்டாரம், வேலணை மேற்கு, யாழ்ப்பாணம்]

கப்டன் லோகிதன் [சின்னத்தம்பி கோகிலானந்தம் - கரவெட்டி மேற்கு, யாழ்ப்பாணம்]

சிவகாமி [யோகராணி இலககுமணன் - பூவரசங்குளம், வவுனியா]

நேரு [பொன்னையா குமாரதாஸ் - கிண்ணியா, திருக்கோணமலை]

திமிலன் [சதாசிவம் ஜீவரட்ணம் பாண்டிருப்பு - 02, கல்முனை, அம்பாறை]

மில்டன் [தட்சணாமூர்த்தி சங்கரதாஸ் - (சங்கர்) சங்கரதாஸ் வீதி, உரும்பராய் மேற்கு, யாழ்.

வில்லியம் [சாமுவேலப்பு விஜயராஜா - 23, பாடசாலை வீதி, திருகோணமலை]

கருணை / திருமால் [இராசா கண்ணன் - சாவற்காடு, சுதுமலை தெற்கு, மானிப்பாய், யாழ்.]

லெப். எமில்டன் [பூச்சி கிருஸ்ணமூர்ததி - 153-ம் கட்டை, முறிகண்டி, கிளிநொச்சி]

காமராஜி [ஆத்மஜோதி இராமையா - 2-ம் கட்டை, முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி]

டென்சியா [லிங்கநாயகி பத்திநாதன் - முள்ளியான் வெற்றிலைக்கேணி, யாழ்ப்பாணம்]

வவுனியா- செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரசசாவெய்திய -

டேவிட் / செழியன் [குணரத்தினம் செலவகுமார்- இராசேந்திரங்குளம் - வவுனியா]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5068)

சிந்தனைக்கு

பரஸ்பரம் தவறான எண்ணம் கொண்டு
அதிலிருந்து முடிவற்ற இன்பம் காணு
திறமை மிக்கோர் தத்துவ அறிஞர் ஸ்;
— வைபேன் ப்ளெ ஸன்

ஈழநாதம்

31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## ஐ. தே. கட்சியின் 'ஜனநாயகம்'

"அகதிகள் உலர் உணவு நிவாரணத்திற்கென 110 கோடி ரூபாவை மேலதிகமாக ஒதுக்கும்படி கடந்த எட்டாம் திகதி பாராளுமன்றம் கூடியபோது முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த சபை அமர்வில் இந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். எதிர்க்கட்சிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கினால் அகதிகளுக்கான நிவாரண உதவியில் பாதிப்பு எதுவும் ஏற்படமாட்டாது" இவ்வாறு புனரமைப்பு அமைச்சர் பி தயாரெட்னா தெரிவித்துள்ளார்

அமைச்சர் தயாரெட்னாவின் இக்கோரிக்கை சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அவதானித்து வருபவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம் அதாவது, சிங்கள அரசாங்கம் ஒன்று நிதி ஒதுக்கீட்டிற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோருவது என்பது ஆச்சரியப்படத்தக்க ஒன்றே

"சிறிலங்கா நீண்ட பாரம்பரியமுடைய பாராளுமன்ற அமைப்பைக் கைக்கொண்ட ஓர் ஜனநாயக நாடு" ஆனால் அதன் செயற்பாடுகள் எந்தளவிற்கு 'ஜனநாயகத் தன்மை' வாய்ந்தவை என்பது கேள்விக்குரியதாகவே இருந்து வந்துள்ளது. அதிலும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும். எதிர்க் கட்சிகளின் கருத்துக்களையும். உரிமைகளையும் பாதுகாப்பதிலும். அதன் நடவடிக்கை கேள்விக்கிடமின்றி என்றுமே ஜனநாயகத் தன்மை கொண்டதாக இருந்ததில்லை

எதிர்க்கட்சிகள் என்றும் எதையும் எதிர்ப்பதற்கு இருப்பவையாக நோக்கப்பட்டவையே ஒழிய ஆக்க பூர்வமான ஆலோசனை கூறுபவையாக அரசாங்கக் கட்சியால் எப்பொழுதும் கருத்திற் கொள்ளப்படவில்லை எதிர்க்கட்சிகளும் பெரும்பாலும் அவ்வாறே நடந்தும் வந்துள்ளன இந்நிலையில், எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு ஆலோசனை என்பன வேண்டப்படாத ஒன்றாகவும், கருத்திற் கொள்ளத் தக்கவை அல்ல என்ற நிலையுமே இருந்தது அதாவது முக்கிய விவகாரங்களில கூட கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

பல வருடங்களாக அவசர காலச் சட்டம் நடைமுறையில் உள்ளது மாதாமாதம் இது குறித்துப் பாராளுமன்றத்தில் விவாதங்களும் இடம்பெற்று வருகின்றது. இதில் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து அரசாங்கக் கட்சிகள் பேசுவ

# மக்களின் சுபீட்சம், சுதந்திரத்திற்காக புலிகள் மரணிக்கத் தயாராக உள்ளனர்

## யாழ். கோட்டை வாயிலில் திலீபன்!

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை வடிவங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாளை எம்மக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் மீண்டும் ஆயுதங்களை நாம் தூக்குவோம். "எமது இறுதி இலட்சியம் தமிழீழம் தான்" என்று தலைவர் பிரபாகரன் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். எமது போராட்ட வடிவங்கள் மாறலாமே தவிர எமது போராட்டத்தின் இலட்சியம் மாற முடியாது.

இதற்காவே நாம் ஆயுதங்களைக் கையளித்தோம் ஆயுதக் கையளிப்பைச் சாட்டாக வைத்துக் கொண்டு மீண்டும் சமூக விரோதக் கும்பல்கள் இம்மண்ணில் உலாவுகின்றன. புலிகளின் கையில் நிருவாகம் இருந்த காலகட்டத்தில் எந்தச் சமூக விரோதக் கும்பல்களும் தமிழ் மண்ணில் இருந்திருக்கவில்லை. ஒரு கொள்ளை கொலை இடம்பெறவில்லை. ஆனால் இன்று தினசரி கொள்ளை, கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இச் சமூக விரோதக் கும்பல்கள் முன்னரும் இதைத்தான் செய்தன அதனால் தான் ஏனைய இயக்கங்களை புலி இயக்கம் தடை செய்தது இவர்கள் எமக்கெதிராகத் தான் போராடிக் கொண்டிருந்தார்கள். இந்திய 'றோ' அமைப்பு எங்களுக்கெதிராகவே செயற்படுகிறது எங்களுக்கெதிராகச் செயற்பட்டு ஏனைய இயக்கங்களுக்கு ஆயுதங்களை கொடுத்துள்ளது.

> தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபன் 07 09-1987 அன்று கோட்டை முகாம் முன்னால் நிகழ்த்திய புகழ்பெற்ற பேச்சின் முதலாம் பகுதி இன்று வெளியாகிறது.

எம்மைக் கொல்வதற்குப் பல திட்டங்களை 'றோ' தயாரித்தது குறிப்பாக எமது தலைவர் வே பிரபாகரனைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளது எனவே தான் இந்த 'றோ' அமைப்பைப் பகிரங்கமாகச் சந்தேகிக்கின்றோம் பகிரங்கமாக குற்றம் கூறுகின்றோம்.

எம்மால் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் இந்தியாவில் இருந்த வேளை இந்த "றோ" அமைப்புத்தான் இவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி எம்மண்ணிற்கு அழைத்து வந்தது' எம்மிடம் ஆயுதங்களைப் பறித்தது சமூக விரோதக் கும்பல்களுக்கு ஆயுதங்களை வழங்கி விரோதச் செயல்களை இந்தியா தூண்டியுள்ளது.

கொள்ளையர்களிடம் இருந்து எம்மக்களைப் பாதுகாப்பதற்காக நாம் கிராமரீதியாக மக்கள் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்தியிருந்தோம் கொள்ளைகளைத் தடுப்பதற்காக நிறுவப்பட்ட எமது பாதுகாப்புக் குழுக்கள் கள் கூட சமூக விரோதக் கும்பல்களினால் தாக்கப்பட்டுள்ளன அண்மையில் கொக்குவிலில் உள்ள குளப்பிட்டி என்னும் இடத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பு உறுப்பினர்கள் தாக்கப்பட்டுக் கடத்தப்பட்டனர். ஆனால் இதே வேளை இந்திய இராணுவத்தினர் அருகே இருந்தார்கள். இந்திய இராணுவம் அதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தது இவ்வாறாயின் நாம்



எவ்வாறு இந்திய இராணுவத்தை அமைதிகாக்கும் படையினர் என ஏற்றுக் கொள்ள முடியும் இச்சமூக விரோதக் கும்பல்களுக்கு இந்திய இராணுவம் துணை போவதாக உள்ளது. நாம் தாக்கப்படும் போதும்கடத்தப்படும்போதும் இந்திய இராணுவத்திற்கு முன்பாகவே அவை இடம் பெறும்போது நாம் எப்படிப் பொறுமையாக இருக்கமுடியும்.

ஒன்றை மட்டும் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் நாம் மரணத்திற்கு அஞ்சவில்லை. வாழவேண்டுமென்றோ ஆளவேண்டுமென்றோ ஆசை வைத்திருக்கவில்லை. அவர்களைப்பொறுத்தவரையில் தமிழீழ இலட்சியத்திற்காகவே போராடிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைச் சுற்றி துப்பாக்கிகளும் இரும்புக்கம்பிகளும் நிமிர்ந்து நிற்கின்றன. நாம் அனைவரும் மரணமாகத் தயாராகவே இருக்கிறோம். புலிகள் இயக்கத்தின் அடிப்படை வாசகமே அது தான். எமது இறுதி மூச்சுவரை நாம் மக்களைப் பாதுகாப்போமென்று தான் அடிக்கடி குறிப்பிடுகிறோம் மக்களுக்குச் சுபீட்சமான சுதந்திரம் கிடைக்குமானால் நாம் மரணமாகத் தயாராக இருக்கிறோம்.

(தொடரும்)

# பிரேமதாசா ஓரே கல்லில் பல மாங்காய்களை அடிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறாரா?

**09-09-92** அன்று சிறிலங்கா தலைநகரான கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ்த் தினசரி ஒன்றின் முன்பக்கத்தில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது அதில் வடக்கு கிழக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் பொன்ராம் ராஜகாரியர் திருமலை வந்து மீண்டும் தமது கடமைகளை ஏற்றார் என்ற தலைப்பில் வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது ராஜகாரியர் இரண்டரை வருட இடைவெளிக்குப் பின்பு மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் தம்முடன் கலந்து பேசவில்லை எனக் கூறியதாகவும் அச் செய்தியில் கூறப்பட்டு இருந்தது ஆனால் இக்கூற்றை நாம் ஆராய்ந்தால் ஈ பி- ஆர் எல்.எவ் இனரின் நிலையினை நோக்க வேண்டும் காலம் காலமாக இந்திய அரசினாலேயே தட்டி வளர்க்கப்பட்டு வரும் இவ் ஈ. பி ஆர் எல். எவ். குழுவினர் ராஜகாரியரை ஒரு வழியால் மாகாணசபைக்கு அனுப்பிவிட்டு தனது எஜமானாரின் (இந்தியா) அனுமதிக்காக காத்திருப்பதாகவே தெரிகிறது. அந்த எஜமானாரின் அனுமதி கிடைக்கும் வரை அவர்கள் ராஜகாரியரை அந்நியப்படுத்தியே வைத்திருப்பர்.

இந்திய அரசின் அனுமதி ... சாங்கம் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தனதும் தனது கட்சியினதும் நேரடித் தலையீட்டை தவிர்த்து வருகிறது ஏன் எனில் அண்மையில் தொண்டமான் போன்ற அரசியல் வாதிகளின் மூலம் முன்வைக்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளுக்கு எழுந்த எதிர்ப்பைக்கொண்டு தமது அரசாங்கம் ஏதாவது அவ்வாறான நடவடிக்கைகளில் இறங்கினால் எதிர்க்கட்சிகளும் பௌத்த பேரினவாதமும் தனக்கு எதிராக அவ்வஸ்திரங்களை பிரயோகித்து தனது அரசாங்கத்தையே கவிழ்த்துவிடும் எனவும் அஞ்சுகிறது இதனால் பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வில் ... கிழக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள உத்தேசித்து இருக்கலாம்.

அதாவது வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வொன்றைக்காணாது இராணுவ நடவடிக்கையின் போக்கில் போவதாகக் காட்டிக் கொள்வதன் மூலம் தென்னிலங்கைச் சிங்களவரைத் திருப்திப்படுத்துவதுடன் சர்வதேச சமூகத்திற்குத்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வைநாடிச்செல்வதாக காட்டிக் கொள்ளக் கூடிய ஓர் திட்டத்தையே முன்வைக்க பிரேமதாசா விரும்புகிறார். அவ்வாறான ஒரு திட்டமே பிரேமதாசாவின் மாகாணசபை அரங்கேற்றமாகும்.

இம் மாகாண சபையின் அரங்கேற்றும் நடவடிக்கையி ... தையும் புரிந்து வைத்திருந்த இலங்கை அரசு விடுதலைப்புலிகளை தடை செய்யாது இருந்தது இது போன்றநடவடிக்கையினால் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் உள்ள உரசல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது. எனவே இந்தியாவில் ஆட்சியில் உள்ள தற்போதைய இந்திரா காங்கிரஸ் அரசினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ள மாகாண சபையினை நடைமுறைப்படுத்துவதாக காட்டிக் கொள்வதன் மூலம் இந்தியாவையும் சாந்தப்படுத்தலாம் என பிரேமதாசா நினைக்கலாம்.

இவ்வாறு மாகாணசபை இயங்க ஆரம்பிக்குமானால் இந்தியாவில்உள்ள ஈ பி ஆர்எல்எப்

அதன் நடவடிக்கை கேள்வி கிடமின்றி என்றுமே ஜனநாயகத் தன்மை கொண்டதாக இருந்ததில்லை

எதிர்க்கட்சிகள் என்றும் எதையும் எதிர்ப்பதற்கு இருப்பவையாக நோக்கப்பட்டவையே ஒழிய ஆக்க பூர்வமான ஆலோசனை கூறுபவையாக அரசாங்கக் கட்சியால் எப்பொழுதும் கருத்திற் கொள்ளப்படவில்லை எதிர்க்கட்சிகளும் பெரும்பாலும் அவ்வாறே நடந்தும் வந்துள்ளன இந் நிலையில், எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு ஆலோசனை என்பன வேண்டப்படாத ஒன்றாகவும், கருத்திற் கொள்ளத் தக்கவை அல்ல என்ற நிலையுமே இருந்தது அதாவது முக்கிய விவகாரங்களில கூட கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

பல வருடங்களாக அவசர காலச் சட்டம் நடைமுறையில் உள்ளது மாதாமாதம் இது குறித்துப் பாராளுமன்றத்தில் விவாதங்களும் இடம் பெற்று வருகின்றது. இதில் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து அரசாங்கக் கட்சிகள் பேசுவதும், எதிர்க் கட்சிகள் எதிர்த்துப் பேசுவதும் வழமையான நடைமுறை. பினனர், அரசாங்கக் கட்சி முழுமையாக ஆதரித்து வாக்களிப்பதும். எதிர்க் கட்சிகள் எதிர்த்து வாக்களிப்பது அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விடுவதும சாதாரணமான நிகழ்ச்சியில் ஒன்று. அதாவது எதிர்க்கட்சிகளின் எதிர்பபை அரசாங்கக் கட்சி என்றும் கருத்திற் கொள்வதில்லை.

இதைபபோன்றே முக்கியவிடயமான வரவு-செலவு திட்டமும் பாராளுமன்றததில் அரசாங்க கட்சி ஆதாிபபதும் எதிர்க்கட்சிகள எதிர்பபதும் வழமையாகும எதிர்கட்சியின் எந்தக் கூச்சலும் அரசாங்கததின்காதில்ஏறுவதில்லைஎதிர்ககட்சிகள் எதிர்த்துவாககளிப்பதையோ அன்று வாக்களிப்பில கலந்து கொளளாமல விடுவதையோ அரசாங்கம அககறை கொள்வதில்லை.

ஆனால் தமிழாின் தேசிய இனப்பிரச்சினை தீர்வு விடயததில மட்டும் எதிர்ககட்சிகளின் ஒததுழைபபு தேவை என அரசாங்கம எதிர்ககட்சிகளிடம கோரிக்கை விடுகின்றது. எதிர்ககட்சிகளின அனுமதியின்றி எதையும செயயமுடியாது எனக் கூறிவருகின்றது அதாவது, தமிழரின தேசிய இனப பிரச்சினைககு இராணுவததீர்வு என அரசாங்கம முடிவெடுத்தபோதுஎதிர்ககட்சிகளின ஆலோசனை பெறபபடவிலலை இராணுவத்திறகென வரவு-செலவு திட்டததின் மூலமும குறை நிரப்புப் பிரேரணைகள மூலமும 2000 கோடி ரூபா வுக்கு மேல ஒதுககிய போது ஆலோசனை ஏதும பெறவிலலை

ஆனால் இராணுவ நடவடிக்கையால பாதிககப பட்டு அகதிகளாக வெளியேறியுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணம வழங்க எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை அரசாங்கம கோருகின்றது அதாவது தமிழமககளுககு எதிராக ஒடுககு முறைச் சட்டங்களையும் இராணுவ தீர்வையும் அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்யும் போது எதுவித ஒத்துழைப்பை நாடாத அரசாங்கக் கட்சி தற்பொழுது நிவாரணம் வழங்குவதற்கு மட்டும், ஒத்துழைப்புக் கோருகின்றது.

அதாவது, தமிழருக்கு எத்தகைய அநியாயமும் விளைவிக்கத் தயாராக இருக்கும் ஐக்கிய தேசிய கட்சி அரசு, அதற்குச் சிறு பிராயச்சித்தம்தானும செய்யத் தயாராக வில்லை இந்நிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இவ் அரசாங்கம் தீர்வு காணும் என யாராவது எதிர்பார்ப்பார்களானால் அது போல் பேதமை எதுவுமில்லை.

**09-09-92** அன்று சிறிலங்கா தலைநகரான கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ்த் தினசரி ஒன்றின் முன்பக்கத்தில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது அதில் வடக்கு கிழக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் பொன்ராம் ராஜகாரியர் திருமலை வந்து மீண்டும் தமது கடமைகளை ஏற்றார் என்ற தலைப்பில் வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது ராஜகாரியர் இரண்டரை வருட இடைவெளிக்குப் பின்பு மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் செனவிரட்ன மாகாண சபையின் பிரதம செயலாளர் கணேசநாதன் ஆகியோரை கலந்தாலோசித்த பின்னரே தனது பழைய கடைமைகளை மீண்டும் பொறுப்பேற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது இது பற்றி கொழும்பில் உள்ள ஈ பி ஆர் எல். எவ் குழுவினரிடம் கேட்கப்பட்டபோது அவர்கள் ராஜகாரியர் தம்முடன் கலந்து பேசவில்லை எனவும் கூறியுள்ளனர்.

மேற்படி செய்தியின்படி வடக்கு கிழக்குக்கான மாகாணசபை இயங்க ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ராஜகாரியரின் வருகைக்கு ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆசீர்வாதமும் இருப்பதாகவே தெரிகிறது. அவ்வாறு ஆசீர்வாதம் இல்லாது இருந்தால் அரசு தரப்பில் இருந்து ஏதாவது ஓர் எதிரொலி நிச்சயம் எழுந்திருக்கும்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களை விட்டு ஈ. பி. ஆர். எல் எவ் இனர் வெளியேறிய போது திரு வரதராசப்பெருமாள் தலைமையில் இயங்கிய மாகாண சபையும் தனிநாட்டு பிரகடனத்தை செய்துவிட்டு இந்திய இராணுவத்துடனேயேவெளியேறியதுயாவருக்கும் நினைவிருக்கலாம். அவ்வாறு வெளியேறிய வரதராஜப் பெருமாளின் தலைமையில் இயங்கிய மாகாணசபைக்கு ராஜகாரியர் அவைத்தலைவராக இருந்தார். அப்படிப்பட்டவர் பிரேமதாசாவின் விருப்பம் இன்றி நிச்சயமாக தனது பழைய பொறுப்புக்களை ஏற்க முடியாது, ஆகவே அவரது பதவி ஏற்புக்கு அரச தரப்பில் இருந்து எதுவித எதிர்பபும் கிளமபாமல் இருப்பதில் இருந்தே இதற்கு அவர்களின் ஆசீர்வாதமும் உண்டு என்ற முடிவிற்கு வரலாம்.

கொழும்பில் உள்ள ஈ. பி. ஆர். எல். எவ், ராஜகாரியர் தம்முடன் கலந்து பேசவில்லை எனக்கூறியதாகவும் அச் செய்தியில் கூறப்பட்டு இருந்தது ஆனால் இக்கூற்றை நாம் ஆராய்ந்தால் ஈ பி- ஆர் எல்.எவ் இனரின் நிலையினை நோக்க வேண்டும் காலம் காலமாக இந்திய அரசினாலேயே தட்டி வளர்க்கப்பட்டு வரும் இவ் ஈ. பி ஆர் எல். எவ். குழுவினர் ராஜகாரியரை ஒரு வழியால் மாகாணசபைக்கு அனுப்பிவிட்டு தனது எஜமானாரின் (இந்தியா) அனுமதிக்காக காத்திருப்பதாகவே தெரிகிறது. அந்த எஜமானாரின் அனுமதி கிடைக்கும் வரை அவர்கள் ராஜகாரியரை அன்னியப்படுத்தியே வைத்திருப்பர்.

இந்திய அரசின் அனுமதியும் ஈ பி. ஆர் எல் எவ். குழுவினருக்கு கிடைத்துவிட்டால் அவர்கள் பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக் கட்சியினருடன் சேர்ந்து இந்திய இராணுவம் வெளியேறியபின் இயங்காது இருக்கும் மாகாண சபையை இரண்டரை வருடங்களுக்குப்பின் மீண்டும் வரதராஜப்பெருமாளின் தலைமையில் புத்துயிர் அளிக்க முயற்சிப்பர் என்றும் கருதலாம்

பிரேமதாசாவும் இம்மாகாணசபை அரங்கேற்றத்திற்கு இசைவார் என்றே கூறலாம் ஏன் எனில் இம் மாகாணசபை அரங்கேற்றத்தின் மூலமாக பிரேமதாசா பாராளுமன்றத்தில் உள்ள சில எம்பிக்களின் ஆதரவை பெறலாம் என நினைப்பதுடன் இவ் அரங்கேற்ற நடவடிக்கையினை தனது அரசியல் எதிரிகளுக்கு எதிரான ஓர் காய் நகர்த்தல் நடவடிக்கையாகவும் கருத இடமுண்டு

தெற்கில் ஏற்கனவே பலஅரசியல் நெருக்கடிகளை சந்தித்துள்ள பிரேமதாசா அவற்றை எல்லாம் தனது சர்வவல்லமை பொருந்திய அதிகாரத்தைப் பயன்படுத்தி முறியடித்துள்ளார்.

கடைசியாக நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசிற்கெதிரான தேர்தல் ஆட்சேபனைமனு மீதான வழக்கிலும் வெற்றியடைந்துள்ள பிரேமதாசா அடுத்துவர இருக்கும் தேர்தல்களில் தனதும் தனது ஐக்கிய தேசியக் கட்சியினதும் வெற்றி வாய்ப்பை இப்போதே உறுதிப் படுததுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டார் போலவே தெரிகிறது. அதற்கான ஒருகட்ட நடவடிக்கையாகவே மேற்படி மாகாண சபையினை அரங்கேற்றும் முயற்சியும் அமையலாம்

ஏற்கனவே தனது செல்வாக்கைப் படிப்படியாக இழந்து வரும் பிரேமதாசாவின அரசாங்கம் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தனதும் தனது கட்சியினதும் நேரடித் தலையீட்டை தவிர்த்து வருகிறது ஏன் எனில் அண்மையில் தொண்டமான் போன்ற அரசியல் வாதிகளின் மூலம் முன்வைக்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளுக்கு எழுந்த எதிர்ப்பைக்கொண்டு தமது அரசாங்கம் ஏதாவது அவ்வாறான நடவடிக்கைகளில் இறங்கினால் எதிர்க்கட்சிகளும் பௌத்த பேரினவாதமும் தனக்கு எதிராக அவ்வஸ்திரங்களை பிரயோகித்து தனது அரசாங்கத்தையே கவிழ்த்துவிடும் எனவும் அஞ்சுகிறது இதனால் பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தனது முயற்சிகளை வெளிப்படையாக காட்டிக் கொள்ளாது

பிரேமதாசா தென்னிலங்கையில் சரிந்து செல்லும் தனது செல்வாக்கை நிவர்த்தி செய்ய வேண்டுமானால் தென்னிலங்கைச் சிங்களவர்களை கவரக் கூடிய திட்டங்களை அறிமுகப்

## வன்னி

படுத்த வேண்டும். அவ்வாறு பெரிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமானால் அரசுக்கு நிதி தேவை ஆனால் அரசிடமோ நிதிப்பற்றாக் குறை கூடுதல் நிதியை சர்வதேச சமூகத்திடம் இருந்து பெறவேண்டுமானால் உள்நாட்டுப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக்கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் பிரேமதாசா அரசுககு உள்ளது ஆனால்அவ்வாறு தென்னிலங்கை எதிர்க்கட்சிகளோ பௌத்த பேரினவாதமோ ஏற்கக்கூடிய அதே நேரத்தில் விடுதலைப்புலிகளாலும் ஏற்ககசகூடிய பிரச்சினைகளுக்கான தீர்வை பிரேமதாசா அரசால் முன்வைக்க முடியாது.

எனவே போலியாகவேனும் உள்நாட்டுப் பிரச்சினையில் ஓர் தீர்வை எட்டுவதாக காட்டிக் கொள்வதன் மூலம் சர்வதேச சமூகத்திடம் இருந்துநிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என பிரேமதாசா நினைக்கலாம் அந்த போலி நடவடிக்கையே மாகாணசபை அரங்கேற்றம் ஆக இருக்கலாம்.

மாகாணசபையை அரங்கேற்றுவதனால் சர்வதேச சமூகத்திற்கு தமதுஅரசு உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வுகண்டு வருவதாகக் காட்டிக்கொள்ளும் அதேநேரத்தில்சிங்களபேரினவாதிகளிடம் இருந்து எதுவித எதிர்ப்பையும் பெறாமல் தொடர்ந்தும் தனது வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள உத்தேசித்து இருக்கலாம்.

அதாவது வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வொன்றைக்காணாது இராணுவ நடவடிக்கையின் போக்கில் போவதாகக் காட்டிக் கொள்வதன் மூலம் தென்னிலங்கைச் சிங்களவரைத் திருப்திப்படுத்துவதுடன் சர்வதேச சமூகத்திற்குத்தான்இனப்பிரச்சினைக்கானதீர்வைநாடிச்செல்வதாக காட்டிக் கொள்ளக் கூடிய ஓர் திட்டத்தையே முன்வைக்க பிரேமதாசா விரும்புகிறார். அவ்வாறான ஒரு திட்டமே பிரேமதாசாவின் மாகாணசபை அரங்கேற்றமாகும்.

இம் மாகாண சபையின் அரங்கேற்றும் நடவடிக்கையினால் பிரேமதாசா அரசிற்கு எதிர்க்கட்சிகளிடம் இருந்தோ அல்லது பௌத்தபேரினவாதத்திடம் இருந்தோ எதுவித எதிர்ப்பும் கிளம்ப முடியாது காரணம் தற்போதைய எதிர்க்கட்சிகள் இந்திய அரசை ஆதரித்து வருபவை எனவே அவை இலங்கை, இந்திய ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்ட மாகாணசபையை எதிர்ப்பதன் மூலம் இந்தியஅரசது ஆதரவை இழக்க விரும்பமாட்டாது எனவே பிரேமதாசா இம்மாகாணசபையை அரங்கேற்றுவதானால் எதிர்க்கட்சிகளது வாய்க்கும் பூட்டுப் போட்டுவிட்டார் என்றே சொல்ல வேண்டும்

அதையும் மீறி எதிர்க்கட்சிகள் பிரேமதாசாவின் இம் மாகாணசபை அரங்கேற்றத்தை விமர்சித்தால் பிரேமதாசா தான் புதிதாக எதையும் செய்யவில்லை எனவும் இலங்கை அரசியல் யாப்பில் உள்ளதையே நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் காட்டிக்கொள்ள முயல்வார்.

மற்றும் இதே நடவடிக்கையின் மூலம் இந்திய அரசையும் திருப்திப்படுத்தி அண்மைக் காலங்களாக இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் நிலவி வரும் உறவில் உள்ள விரிசலையும் குறைக்க முயல்கின்றார் போல் தெரிகிறது

விடுதலைப் புலிகளை தடை செய்த இந்திய அரசு, இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளை தடை செய்யவேண்டும் என எதிர்பார்த்தது. ஆனால் இந்தியஅரசுஎதிர்பார்த்ததைப் போல் தடை செய்தால் இந்தியாவின் மேலாதிக்கத்தை ஏற்றதாக போகும் எனவும், அத்துடன் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் அதற்கு விடுதலைப் புலிகளுடனேயே உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற யதார்த்தத்தையும் புரிந்து வைத்திருந்த இலங்கை அரசு விடுதலைப்புலிகளை தடை செய்யாது இருந்தது இது போன்றநடவடிக்கையினால் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் உள்ள உரசல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது. எனவே இந்தியாவில் ஆட்சியில் உள்ள தற்போதைய இந்திரா காங்கிரஸ் அரசினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ள மாகாண சபையினை நடைமுறைப்படுத்துவதாக காட்டிக் கொள்வதன் மூலம் இந்தியாவையும் சாந்தப்படுத்தலாம் என பிரேமதாசா நினைக்கலாம்.

இவ்வாறு மாகாணசபை இயங்க ஆரம்பிக்குமானால் இந்தியாவில்உள்ள ஈ பி ஆர் எல் எப் உட்பட ஏனைய தமிழ்க்குழுக்களையும் தொடர்ந்து இந்தியா வைத்திருக்காது இலங்கைக்கு அனுப்பும் எனவும் எனவே இது காலவரையும் தமிழ்க்குழுக்களை வைத்து இந்தியா நகர்த்தி வந்த காய் நகர்த்தல்களை தாம் மேற்கொள்வதற்கும் பிரேமதாசா அரசாங்கம் திட்டமிட்டிருக்கலாம்.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது பிரேமதாசா வரும் 3வது ஜனாதிபதி தேர்தல் வரை தானோ அல்லது தனது கட்சியினரோ நேரடியாக வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான தீர்வுகாணும் முயற்சிகளிலும் சமாதான பேச்சுக்களிலும் ஈடுபடுவதை முற்றாகவே தவிர்ப்பதற்கு எண்ணியுள்ளார்கள் போல் தெரிகிறது. இதில் இருந்து பிரேமதாசா வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கான சமாதான பேச்சுக்களுக்கான கதவுகளைமுற்றுமுழுதாக மூடிவிட்டார் என்றே கூறலாம்.

அடுத்த 3வது ஜனாதிபதி தேர்தல் பாராளுமன்றுக்கான பொதுத்தேர்தல் ஆகியவற்றில் தானும் தனது கட்சியினரும் வெற்றி பெற்றால் மட்டுமே பிரேமதாசா மீண்டும்சமாதானத்துக்கான கதவுகளை திறக்க உத்தேசித்திருக்கலாம்.

அதுவரை பிரேமதாசா சமாதான பேச்சுக்களில்தான் அக்கறை உள்ளவர் எனக் காட்டும் அதே நேரத்தில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தனது இரட்டை முகத்தோற்றத்துடனேயே இருப்பார்-

ஆனால் பிரேமதாசாவின் இத் தந்திரங்களின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பவர்கள் விடுதலைப் புலிகளே. பிரேமதாசா என்னதான் திட்டங்களை வகுத்தாலும் விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் அவரது திட்டங்களின் திசையையே மாற்றிவிடலாம்.

# ஈழநாதம்

## யூகோ உறுப்புரிமை ரத்து? ஐரோப்பிய சமூகம் இணக்கம்

(ஜெனிவா)

முன்னாள் யூகோ செலவாக்கியா ஐ.நா. பொதுச்சபையில் தொடர்ந்து பங்கு பெறுவதற்கு தடை விதிக்க வேண்டுமென்பதில் ஐரோப்பிய சமூக அங்கத்துவ நாடுகள் இணக்கம் கண்டுள்ளன.

யூகோசெலவாக்கியா பிளவுபட்டதையடுத்து பொஸ்னியர்களுக்கும், சேர்பியர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் ஏற்பட்டு இருப்பதும் குரோசியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட படையினர் சரயோவா நகரை முற்றுகையிட்டிருப்பதும் தெரிந்ததே.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் யூகோ 'செலவாக்கியாவின்' மீது தடை விதிக்கும் தீர்மானம் இன்று அல்லது திங்கட்கிழமை வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படலாம் எனவும், இத்தீர்மானம் அங்கிகரிக்கப்பட்டால்பொதுச் சபை இறுதி நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது,

ஐக்கிய நாடுகள் சபை ஒரு நாட்டின் அங்கத்துவத்தை செல்லுபடியற்றதாக்குவதும், புதிதாக மீள விண்ணப்பிக்கும்படி கோருவதும், இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

செலாவணிச் சந்தை நெருக்கடி

## ஐரோப்பிய தலைவர்கள் கூடி விவாதம் நடத்தவேண்டும்

(லண்டன்)

ஐரோப்பிய செலாவணிச் சந்தையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கூடி விவாதிக்க வேண்டுமென இத்தாலியும், பிரான்சும் கேட்டுக் கொண்டுள்ளன.

ஐரோப்பிய வெளிச் செலாவணி விகித முறையிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வது என்று பிரிட்டனும், இத்தாலியும் முடிவு செய்திருப்பதால் உயர் நிலையில் பேச்சு நடத்தும் தேவை ஏற்பட்டிருப்பதாக பிரான்சின் பிரதமர் கூறியுள்ளார்

இதேவேளை மட்றிட் உடன்படிக்கை குறித்து பிரான்சில் ஞாயிறன்று நடைபெறவிருக்கும் கருத்துக் கணிப்பின் முடிவுகளுக்கு காத்திருக்கப் போவதாக ஐரோப்பியசமூகத்திற்கு தற்போது தலைமை தாங்கும் பிரிட்டன் கூறியுள்ளது.

## ஜார்க்கன்ட் பிரச்சினை; தேசிய தலைவர்கள் சந்திப்பு

(டில்லி)

ஜார்க்கன்ட் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு ஒன்றுக்கு உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஜார்க்கன்ட் கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள யோசனைகள் பற்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களோடு உள்துறை அமைச்சர் கலந்துரையாடவுள்ளார். ஜனதாதளம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சியக் கட்சி, பாரதீய ஜனதா ஆகிய கட்சிகளின் தலைவர்களோடு அமைச்சர் தனித்தனி பேச்சுக்களையும் நடத்துவார்.

இதனிடையே பீகார் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் கருத்தை அறிவதற்காக அவர்களுக்கு காங்கிரஸ்கட்சிப் பொதுச் செயலாளர் சுசில்குமார் சிண்டே புதுடில்லி வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை மாநாட்டில் கலந்து கொண்ட

## வி.பி. சிங்கிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குக

சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி ஒழுங்கு செய்தி எடுக்குமாறு இந்திரா காங்கிரஸ் லோக்சபா உறுப்பினர்

## ஷெல் வீச்சு வேளையில் திருடியவர் பிடிபட்டார்

ஷெல் வீச்சு நடந்த வேளை பொதுமக்கள் பீதியுடன் பாதுகாப்புத்தேடி ஓடுவதைப் பயன்படுத்தி சுவரேறி வீடொன்றில் நுழைந்த இளைஞரொருவர் திருடடில் ஈடுபட்டதாக பொதுமக்களால் மடக்கிப்பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை குருநகர் பவுண்காார்மல் வீதி வீடொன்றில நடைபெற்றது செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த மேற்படி இளைஞர் யாழ் காவல்துறைப் பணிமனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (21)

## வவுனியா நகரப்பகுதியில் தமிழர்வீடுகளில் கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரில் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில்உள்ளவீடுகளில் மீண்டும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதை அடுத்து மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்

இனந் தெரியாத கோஷ்டி ஒன்று இரவு வேளைகளில் வீட்டுக் கதவுகளை உடைத்து இக் கொள்ளைகளில் ஈடுபடுகிறது வீட்டுக்காரர் விழித்திருந்தும் கண்களை மூடி நித்திரை செய்வதுபோல் நடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

சிங்களக் குண்டர்கள் சிலரே இக் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனர். கத்தி பொல்லு போன்ற பயங்கர ஆயுதங்களுடன் இவர்கள் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் இதனால் வீட்டுக்காரர்களால் எதிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே கொள்ளையில் ஈடுபட்ட சிங்களக் குண்டர்களில் சிலர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (தி)

## தடைசெய்யப்பட்ட பொருள் எருத்துவந்த பெண் மறைவு

(வவுனியா)

தலையணைக்குள் தடை செய்யப்பட்ட பொருள் எடுத்துவந்த பெண் மாயமாய் மறைந்தார் இதனால் இராணுவம், மற்றும் பொலிஸார் ஆத்திரமடைந்தனர்.

வவுனியா நகரிலிருந்து ஐந்து தலையணைகளை பெண் ஒருவர் எடுத்துவந்த போது, தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் வைத்து பொலிஸார் அவற்றை சோதனை செய்யாமல் அனுப்பி வைத்தனர்.

ஆனால் அந்தத் தலையணைகளுக்குள் தடைசெய்யப்பட்ட பொருள் ஒன்று தொகையாக உள்ளது என்று தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து இராணுவத்தினால் தலையணைகள் சோதனைக்குட்படுக்தப்பட்டபோது அப்பொருளுக்குரிய பெண்ணைக் காணவில்லை

தடைசெய்யப்பட்ட பொருளுடன் தலையணையை இராணுவம் கைப்பற்றிக் கொண்டது, தலையணைக்குள் இருந்த பொருள் 'லஞ்சீற்' என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பெண் மாயமாய் மறைந்ததையிட்டு இராணுவமும் பொலிஸாரும் ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்தனர்

இதன் பின்னர் வவுனியா நகரிலிருந்து வடபகுதி நோக்கி எடுத்து வரப்படும் அனைத்துத் தலையணைகளும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அறியப்படுகிறது (தி)

## கிழக்குமாகாணத்தில் உதவி அரசாங்கஅதிபர் கைது

(கொழும்பு)


கிழக்கு மாகாணத்தில்உதவி அரசாங்க அதிபர் ஒருவர் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் இந்த உதவி அரசாங்க அதிபர் அரசுக்கு விரோதமாக செயற்பட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

யாழ். அதிபர்

முன்னேறிய

## வீரச்சாவு



கப்டன் புண்ணியம்

கட்டைக்காட்டுப் பகுதியில் 15-09-92 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்மோதலில் கப்டன் புண்ணியம் (கனகலிங்கம் புவனேஸ்வரன் - யோகபுரம், மல்லாவி) வீரச்சாவடைந்தார்.



## திலீபன் ஐந்தாம் நாள் (19. 9. 1992)

1 சிறுநீர் கழிக்க மனமெண்ணும் - ஓரமாய்
சென்று விட்டால் அவனு ன்னும்!
சி நீர் வராது அவ து த்தான் - துயரப்
பெருநதியில தினம் நீச்சல் அடித்த ன்!

2 பார்க்கு மிடமெல்லாம் பறவைக்கூட்டமோ? - இல்லை
வேர்க்க . . . விழிகலங்க நிற்கின்ற மக்களோ?
ஊர்ச் சிறுவர் எல்லோரும் ஒன்றாகி வந்தனரோ?
-தம்
உயிரான பெருமகனின் நிலைகான நின்றனரோ?

3 இந்திய அதிகாரி வந்தங்கு பார்க்கையிலே-கண்ணீர்
சிந்திய மக்கள் கற்களைத் தூக்கினர்!
முந்தி விட்டார் நம்புலிகள்; இல்லையெனில்
முடிந்திருக்கும் 'கேணல் பரார்' உயிரங்கே!

4 தாய்மண் ஈன்றெடுத்த தவப்புதல்வன் படுக்கையிலே
நோய் வந்து கிடப்பின் நிம்மதியாய் இருந்திருப்போம்
-இவன்
நோய் வந்தா கிடந்தான்? எமையழிக்க வந்த
நாய் கடித்து அன்றோ கிடக்கின்றான்?

5 பிரபாகரன் பாசறையில் பிறந்து வந்த
சருகுமான் ஒன்று சாகவரம் கேட்கிறதோ?
எரிமலை யொன்று இடம் பெயர்ந்து வந்திங்கே
எரிக்கிறதோ தன்னுடலை? . , என் செய்வோம்?

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## ஊரடங்கு

யாழ்ப்ப ணக்குட நடில் நேற்றுக் காலை ஆறு மணி முதல் மறு அறிவித்தல வரை ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்படுவதாக பாதுகாப்பு படையினர் அறிவித்துள்ளனர். படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியெங்கும் இந்த ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என மேலும் தெரிவிககப்பட்டுள்ளது.

## ஒருவர் பலி

திருக்கோணமலையில் டிரக் வண்டி மீது இனந்தெரியாதோர் நடாத்திய குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றுமொருவர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்

திகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் குருநகரில்புனிதயாகப்பர் கோயில், செபஸ்ரியான் வீதி, மவுண்காமல்வீதி புதுமை மாதா கோவிலடி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனால் புனிதயாகப்பர் கோயில் குருமனை இல்லமும் தாக்குதலுக்குள்ளானது எனினும் குருமனையில் இருந்த வணபிதா எம். இம்மானுவல் அடிகளார் மயிரிழையில்உயிர் தப்பினார்.

மேலும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பத்திற்கு மேற்பட்ட வீடுகளும் பெறு

மக்கள் தன்கேணி ஆகிய பகுதிகளை நோககி தொடர்சியான தாக்குதல்களை நடாத்தின.

இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களையும், துப்பாக்கி மற்றும் கலிபர் தாக்குதல்களையும் நடத்தினர். கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடாத்திய வண்ணமிருந்தனர். உலங்கு வானூர்திகள் மேற்படி பகுதி வான்பரந்தியத்தில் தொடர்ச்சியாக வட்டமிட்டு பொதுமக்களை நோக்கி கலிபர்த் தாக்குதல்களை நடாத்திய வண்ணமிருந்தன. இத்தாக்குதல்களால் மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் மாதகல் பகுதியில் நிலைகொண்டிருந்தசிறிலங்கா இராணுவத்தினர் சுழிபுரம் பகுதி மக்களின் வாழ்விடங்களை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த வர்த்தகரான வைத்திலிங்கம் இரத்தினசபாபதி (வயது 51) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சி. பங்கயற்செல்வி (வயது 40), சி. உமாராணி (வயது 12), சி பிரசாந்தி (வயது 3). சி. நிஷாந்தி (வயது 5) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

ஜார்க்கன்ட் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு ஒன்றுக்கு உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஜார்க்கன்ட் கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள யோசனைகள் பற்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களோடு உள்துறை அமைச்சர் கலந்துரையாட

திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சியக் கட்சி, பாரதீய ஜனதா ஆகிய கட்சிகளின் தலைவர்களோடு அமைச்சர் தனித்தனி பேச்சுக்களையும் நடத்துவார்.

இதனிடையே பீகார் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் கருத்தை அறிவதற்காக அவர்களுக்கு காங்கிரஸ்கட்சிப் பொதுச் செயலாளர் சுசில்குமார் சிண்டே புதுடில்லி வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

சோதனை செய்யாமல் அனுப்பி வைத்தனர்.

ஆனால் அந்தத் தலையணைகளுக்குள் தடைசெய்யப்பட்ட பொருள் ஒன்று தொகையாக உள்ளது என்று தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து இராணுவத்தினால்

ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்தனர்

இதன் பின்னர் வவுனியா நகரிலிருந்து வடபகுதி நோக்கி எடுத்து வரப்படும் அனைத்துத் தலையணைகளும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அறியப்படுகிறது (தி)

சென்னை மாநாட்டில் கலந்து கொண்ட

## வி.பி. சிங்கிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குக

சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி ஒழுங்கு செய்திருந்த தீவிரவாதிகள் அமைப்புகள் பலவும் கலந்து கொண்ட மாநாட்டில் முன்னாள் பிரதம மந்திரி வி. பி.சிங்கும் முன்னாள் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வானும் கலந்து கொண்டதற்காக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இந்திரா காங்கிரஸ் லோக்சபா உறுப்பினர் இரா அன்பரசு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இவ் விடயத்தில் பிரதம மந்திரி தலையிட வேண்டும் என்று நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் இரா. அன்பரசு கேட்டுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
(வரைவுள்ளது)

### கிளைக்குழுத் தேர்தல் ஒத்திவைப்பு

தேர்தல் உத்தியோகத்தர் திரு. எ. சின்னத்தம்பி அவர்களின் கடிதப்படி 19. 09. 92ல் நடாத்தப்பட இருந்த கிளைக்குழுத் தேர்தல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது. இத்தகவலைச் சகல கிளைக்குழு உறுப்பினர்களுக்கும். அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

பொ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்

சி/5075

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

### மேற்பார்வையாளர்

குடிசைகள் திருத்துதல், குடிசைகள் வேறு இடத்திற்கு மாற்றுதல், புதிய குடிசைகள் அமைத்தல் ஆகிய வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு மேற்பார்வையாளர் இருவர் இரண்டு மாதத்திற்கு மாத்திரம் அமர்த்தப்பட உள்ளனர். இவ் வேலையில் தேர்ச்சியும்; அனுபவமும் பெற்றவர்கள் 21-09-92 திங்கட்கிழமை, யாழ் கிளை தலைமையகத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சகல ஆவணங்களுடனும் சமுகம் தரவும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
10-09-92

கௌரவ செயலாளர்

(சி-5073)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கிழக்குமாகாணத்தில் உதவி அரசாங்க அதிபர் கைது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில்உதவி அரசாங்க அதிபர் ஒருவர் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் இந்த உதவி அரசாங்க அதிபர் அரசுக்கு விரோதமாக செயற்பட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

### யாழ். அதிபர் நாளை வருவார்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரச அதிபர் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஆகியஇருவரும் நாளையாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

நோயாளர்களை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலை செல்லும் "குமண" கப்பலிலேயே இவ் இருவரும் அங்கிருந்து புறப்பட்டு யாழ் வருவார்கள் என தெரியவருகின்றது. (பா)

### 500 அடையாள அட்டைகள் வந்தன

தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த 500 பேருக்கு அடையாளஅட்டைகள் வந்துள்ளன.

குமணகப்பலில் இந்தஅடையாள அட்டைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அடையாள அட்டைகள் செயலகத்துக்குக்கிடைத்ததும் அவற்றைத் தாமதமின்றி உரியவர்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயிலுநர்

வையுடன் வழங்குவதற்குரிய கட்டு நிதியைக் கணக்குப் பார்த்து தமக்கு அறிவிக்குமாறு யாழ். பிரதேசக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வீரச்சாவு

இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 2ஆம் லெப்டினன்ட் தேவானந்தி (சுப்பிரமணியம்- தேவராணி -ஐயனார் கோவிலடி, மல்லாகம்)வீரச்சாவடைந்தார்.வீரச்சாவடைந்த இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

முன்னேறிய

சண்டையாக இருந்தது இறுதியில் தாம் முன்னேறிய நிலைகளில் இருந்து 4 45 மணியளவில் இராணுவம் விரட்டப்பட்டது பின்வாங்கத் தொடங்கிய இராணுவம் தனது பழைய நிலைக்குத் திரும்பும் வரை இம்மோதல் தொடர்ந்தும் இடம்பெற்றது

வலி

மூளாய், பொன்னாலை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, பிரான்பற்று, சங்கானை, தொட்டிலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர் இவர்கள் மானிப்பாய், சுதுமலை, உரும்பராய், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் பெருமளவில் தஞ்சமடைந்துள்ளனர் (க,ச,11,9)

சிசிலின்

ஆகாய, தரை, கடல் மார்க்கமாக ஆறு மணித்தியாலங்கள் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

மேலும் இந் நடவடிக்கையில் இரண்டு இராணுவத்தினர் பலியாகியதாகவும் நால்வர் கயமடைந்ததாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தியாகி

திருத்தம் செய்யப்படவுள்ளன

கரவெட்டி வட்டப்பிரிவில் கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஆதரவில் கரவெட்டி மக்களால் அம்பன் மருத்துவமனை துப்புரவு செய்யப்படும்.

பளை வட்டப்பிரிவில் வாகன சங்கமும், வர்த்தக சங்கமும் மக்களுடன் இணைந்து சிரமதானமூலம், பளை கண்டி வீதி, திருத்தி அமைக்கப்படவுள்ளது.

கொடிகாமம் வட்டப் பிரிவில் பொதுமக்களால் கச்சாய் பாடசாலை வீதி துப்புரவு செய்யப்படவுள்ளது.

கப்டன் புண்ணியம்

கட்டைக்காட்டுப் பகுதியில் 15- 09- 92 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்மோதலில் கப்டன் புண்ணியம் (கனகலிங்கம் புவனேஸ்வரன் - யோகபுரம், மல்லாவி) வீரச்சாவடைந்தார்.



வீரவேங்கை நாகமுத்து

18- 09- 92 நேற்றுக்காலை சாவகச்சேரிப் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த வீரவேங்கை நாகமுத்து (இராமச்சந்திரன் கோணேஸ்வரன் சில்லாலை பண்டத்தரிப்பு) வீரச்சாவடைந்தார்



வீரவேங்கை மகேஸ்வரி

17- 09- 92 அன்று சுகயீனம் காரணமாக விடுதலைப்புலிகளின் பெண் போராளியான வீரவேங்கை மகேஸ்வரி (முத்துக்குமார் - ரஜனி பொன்னம்பலம் வீதி, அரியாலை) மரணமடைந்தார்

வீரச்சாவடைந்த இம்மூன்று வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ததாகவும் மற்று மொருவர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்

திகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் குருநகரில்புனிதயாகப்பர் கோயில், செபஸ்ரியான் வீதி,மவுண்காமல்வீதி புதுமை மாதா கோவிலடி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனால் புனிதயாகப்பர் கோயில் குருமனை இல்லமும் தாக்குதலுக்குள்ளானது எனினும் குருமனையில் இருந்த வணபிதா எம். இம்மானுவல் அடிகளார் மயிரிழையில்உயிர் தப்பினார்.

மேலும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பத்திற்கு மேற்பட்ட வீடுகளும் பெறுமதிமிக்க பொருள்களும் சேதமடைந்தனஇதில்ஐயாத்துரை என்பவரின் வீட்டில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால ஐமதி (27 வயது) மகேந்திரன் ராணி (44 வயது) மதிராசா (4 வயது) ஆகிய ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவரும் குருநகர் செபஸ்ரியான் வீதியில் வலந்தயன் என்பவரது வீட்டில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் வ. யூஜின் (32வயது) வ ரொனி (5 வயது) வ.கயல்விழி (3வயது) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் காயமடைந்கனர் இவர்களில் படுகாயமடைந்தோர் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சம்பவம் நடைபெற்ற மேற்படி பகுதிகளில் இருந்து வெடிக்காத நிலையில் பல ஷெல்ககளைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் இப்பகுதிகளில் இருந்து பீதியினால் மக்கள் வேறு இடங்களிற்கு இடம் பெயர்ந்தனர் பின்னர் தாக்குதல் தணிய மீண்டும் வீடு திரும்பியதைக் காணக்கூடியதாக இருந்தது

மருந்தன. இத்தாக்குதலி னால் மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் மாதகல் பகுதியில் நிலைகொண்டிருந்தசிறிலங்கா இராணுவத்தினர் சுழிபுரம் பகுதி மக்களின் வாழ்விடங்களை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த வர்த்தகரான வைத்திலிங்கம் இரத்தினசபாபதி (வயது 51) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சி. பங்கயற்செல்வி (வயது 40), சி. உமாராணி (வயது 12), சி பிரசாந்தி (வயது 3), சி. நிஷாந்தி (வயது 5) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

காலை 11 மணியளவில் வடலியடைப்பு பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களினால் இளவலைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வடலியடைப்பில் தங்கியிருந்த இராசையா (வயது 68) என்பவர் பலியானார்.

இதேவேளை பரவலாக உலங்குவானூர்தி நடத்திய கலிபர் தாக்குதல் மற்று எறிகணைத் தாக்குதல்களினால் மகாலிங்கம்பிலிப்பு(7)ஊரெழு கே. தில்லைநாதன் (32) மாகியப்பிட்டி, எ. நாகேஸ்வரி(42) அளவெட்டி, ச. ஜலிதா (13) தெல்லிப்பளை, கிரகபெரியார் (40) சுழிபுரம், மோகனதாஸ் கட்டுடை, விமரராசா (7) மாகியப்பிட்டி, ரி. இளங்கோவன் (32) சுன்னாகம், வே மாலினி [16] சிறுவிளான் கு. தவராசா (11] மண்டுமண்டை, இ. சின்னம்மா [67] சண்டிலிப்பாய், ஆகியோர் படுகாயமடைந்தனர்

[ச], [க], [பா]

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 18-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5696

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
28-2145, 28-4183, 41-9487, 26-5113, 24-4701, 26-5760, 41-5015, 24-9825, 28-587, 24-2016, 24-3897, 24-4707, 26 495, 42-2595, 27-9756, 26-6361, 27-5187, 24-9676.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
24-5137, 26-1658, 24-4238, 27-5775, 26-5157.